13947

OL/2023(2024)/42/T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

42 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

කර්ණාටක සංගීතය **I, II**
கர்நாடக சங்கீதம் **I, II**
Carnatic Music **I, II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - **10** நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கர்நாடக சங்கீதம் I

**அறிவுறுத்தல்கள் :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** ஜன்னிய ராகப் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை
(1) 4 (2) 5 (3) 7 (4) 9

**2.** திருவிசைப்பா அமைந்துள்ள திருமுறை
(1) 6 ஆம் திருமுறை (2) 7 ஆம் திருமுறை
(3) 8 ஆம் திருமுறை (4) 9 ஆம் திருமுறை

**3.** முத்துத்தாண்டவர் இயற்றியுள்ள கீர்த்தனைகள், பதங்கள் என்பனவற்றின் எண்ணிக்கைகள் முறையே
(1) 25, 60 (2) 30, 60 (3) 60, 25 (4) 60, 35

**4.** கா, மாப மகா ரி ஸா ;; - எனும் ஸ்வர சஞ்சாரத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை
(1) 14 (2) 15 (3) 16 (4) 22

**5.** தக்கேசிப்பண் குறிக்கும் ராகம்
(1) பைரவி (2) காம்போஜி (3) மத்யமாவதி (4) பூபாளம்

**6.** பிலஹரி ராகம் ஓர்
(1) பாஷாங்க ராகம் (2) உபாங்க ராகம் (3) வக்ர ராகம் (4) நிஷாதாந்திய ராகம்

**7.** சங்கீத அளவுகோல் என அழைக்கப்படும் வாத்தியம்
(1) மிருதங்கம் (2) நாதஸ்வரம் (3) வயலின் (4) வீணை

**8.** "உள்ளமிரங்கி" எனத் தொடங்கும் ஹம்சத்வனி ராகக் கீர்த்தனையில் குறிப்பிடப்படும் தெய்வம்
(1) பராசக்தி (2) விஷ்ணு (3) சிவன் (4) முருகன்

**9.** "மனவிசேகொனராதா" - என்னும் ஆதிதாள வர்ணம் ஓர்
(1) தானவர்ணம் (2) தருவர்ணம் (3) பதவர்ணம் (4) ராகமாலிகா வர்ணம்

**10.** மொத்த அட்சரங்கள் 14 இனை எண்ணிக்கையாகக் கொண்ட தாளம்
(1) சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம் (2) கண்டஜாதி அடதாளம்
(3) கண்டஜாதி துருவதாளம் (4) கண்டஜாதி மட்டியதாளம்

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**11.** பஞ்சபுராணம் பாடப்படும் ஒழுங்கில் நான்காவதாக இடம்பெறும் திருமுறை
(1) திருப்பல்லாண்டு (2) திருவாசகம் (3) திருவிசைப்பா (4) தேவாரம்

**12.** காந்தாரத்தை துர்பல ஸ்வரமாகக் கொண்ட இராகம்
(1) பந்துவராளி (2) ஆரபி (3) ஹரிகாம்போஜி (4) மத்யமாவதி

**13.** விலோம சாபு தாளத்தின் எதிர்ப்பதம் குறிப்பது
(1) கண்ட சாபு (2) சங்கீர்ண சாபு (3) மிஸ்ர சாபு (4) கிரம சாபு

**14.** சிருங்காரம், பக்தி ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் உருப்படி
(1) இலட்சணகீதம் (2) ஜதிஸ்வரம் (3) பதம் (4) தேவாரம்

**15.** பின்வருவனவற்றுள் சங்கராபரண இராகத்திற்கு இணையான பண்ணில் அமைந்துள்ள தேவாரம்
(1) "உற்றுமை சேர்வது..." (2) "பண்ணும் பதமேழும்..."
(3) "பண்டு நால்வருக்கு..." (4) "மானினேர்விழி..."

**16.** மிருதங்க வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யம் அடைந்த வித்துவான்
(1) மைசூர் சௌடைய்யா (2) தஞ்சாவூர் வைத்தியநாத அய்யர்
(3) சிட்டிபாபு (4) காரைக்குறிச்சி அருணாசலம்

**17.** பந்துவராளி ராகத்திற்கு ஒப்பான பண்கள்
(1) பழந்தக்கராகம், தக்கராகம் (2) கொல்லி, கொல்லிக்கௌவாணம்
(3) காந்தரம், பியந்தைக்காந்தாரம் (4) சாதாரி, நட்டராகம்

**18.** யாழ் வாத்தியத்துடன் திருமுறைகள் பாடப்பட்டமைக்கு சான்றாக அமைந்த தேவாரம்
(1) "தோடுடைய செவியன்...." (2) "உற்றுமை சேர்வது...."
(3) "மாதர் மடப்பிடியும்...." (4) "பண்ணும் பதமேழும்...."

**19.** "தெரதீயகராதா" எனும் கௌளிபந்து ராகக் கிருதியைப் பாடியவர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) தியாகராஜ சுவாமிகள்
(3) சியாமாசாஸ்திரிகள் (4) புரந்தரதாஸர்

**20.** "திருமால் அருமருகா மறைபுகழும்" என்னும் சாகித்தியத்தை சரணமாகவுடைய தானவர்ணத்தின் ராகம்
(1) மத்யமாவதி (2) சங்கராபரணம் (3) ஆரபி (4) பிலஹரி

**21.** தியாகராஜ சுவாமிகளுடன் சமகாலத்தில் வாழ்ந்த தமிழ் வாக்கேயகாரர்
(1) அருணாசலக் கவிராயர் (2) பாபநாசம் சிவன்
(3) முத்துத் தாண்டவர் (4) கோபாலகிருஷ்ண பாரதியார்

**22.** ரேவதி இராகத்தின் ஆரோகணம், அவரோகணம்
(1) ஆ : ஸரிமபநிஸ்
அ : ஸ்நிபமரிஸ
(2) ஆ : ஸரிகபதஸ்
அ : ஸ்தபகரிஸ
(3) ஆ : ஸரிமபநிஸ்
அ : ஸ்நிபமகஸ
(4) ஆ : ஸரிகபநிஸ்
அ : ஸ்நிபகரிஸ

**23.** "அபகார நிந்தை பட்டுழலாதே" எனும் திருப்புகழ் அமைந்த தாளம்
(1) கண்ட சாபு (2) மிஸ்ர சாபு (3) கண்ட ஜம்பை (4) கண்ட திரிபுடை

**24.** பல்வேறு வகையான வாத்தியக் கருவிகள் ஒருங்குசேர்ந்து இசைக்கப்படும் நிகழ்வு
(1) தாளலயம் (2) பல்லியம் (3) தாளதரங்கம் (4) வில்லுப்பாட்டு

**25.** "உள்ளம் எல்லாம் கலை வெள்ளத்தால் நனைய..." என்னும் வரிகள் இடம்பெறும் கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
(1) பந்துவராளி (2) ரேவதி (3) கல்யாணி (4) ஹம்ஸநாதம்

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**26.** கீழே தரப்பட்டுள்ள சதுஸ்ரஜாதி ஏகதாள ஸ்வர சஞ்சாரங்களில் சதுஸ்ரநடையில் அமைந்தது
(1) ஸ்ாஸ் ரிகா் ரிஸ்ஸ் ஸ்ா, ||
(2) ஸஸரிகா கரிகபா தபதஸ்ா பதஸ்ரீ ||
(3) ஸரிகமரிகா ரிகமபகமா கமபதமபா மபதநிபதா ||
(4) ஸ்ஸ்ரிஸ் ஸ்ாநித நிஸ்ரிஸ் நிதபா ||

**27.** தியாகராஜ சுவாமிகளின் கிருதிகளுக்கு ஒப்பான ரஸம்
(1) நாளிகேர ரஸம் (2) கதலி ரஸம்
(3) திராட்சை ரஸம் (4) சிருங்கார ரஸம்

**28.** அகத்திணை மரபை சார்ந்து தலைவன் தலைவிக்கு இடையிலான அன்பை வெளிப்படுத்தும் முறையில் திருநாவுக்கரசரால் பாடப்பட்ட தேவாரம்
(1) "கூற்றாயினவாறு விலக்ககலீர்...." (2) "உற்றுமை சேர்வது மெய்யினையே...."
(3) "முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்...." (4) "பண்டு நால்வருக்கு...."

**29.** கோபாலகிருஷ்ண பாரதியார் "நந்தனார் சரித்திரம்" என்னும் இசை நாடகத்தினை இயற்றக் காரணமாக இருந்தது
(1) திருவாசகம் (2) இயற்பகை நாயனார் சரித்திரம்
(3) காரைக்கால் அம்மையார் சரித்திரம் (4) பெரியபுராணம்

**30.** பின்வரும் வாத்தியங்களுள் ஹிந்துஸ்தானி இசைக்குரிய வாத்தியங்களின் தொகுதி
(1) சித்தார், தபேலா, கிற்றார் (2) சித்தார், சாரங்கி, தபேலா
(3) தபேலா, சாரங்கி, மிருதங்கம் (4) சித்தார், ஷெனாய், வீணை

**31.** கதாபாத்திரம், இசைக்கருவிகள், பாடல், உரையாடல், பின்னணி அமைப்பு என்பவற்றைக் கொண்ட ஆற்றுகை நிகழ்வு
(1) இசை நாடகம் (2) நிருத்திய நாடகம் (3) வில்லுப்பாட்டு (4) கதாகாலட்சேபம்

**32.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - உடற்பாகம் பைன், மேபிள், சிகமுர் ஆகிய மரங்களினால் செய்யப்படும்.
B - EADG எனும் முறையில் சுருதி சேர்க்கப்படும்.
C - $2\frac{1}{2}$ ஸ்தாயி வரை வாசிக்கும் வசதி கொண்டது.
D - தாளத்தந்திகளை உடையது.
E - லால்குடி ஜெயராமன் அவர்களால் வாசிக்கப்பட்டது.
மேற்கூறிய கூற்றுகளுள் வயலின் வாத்தியத்திற்குப் பொருத்தமானவை
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D

**33.** வில்லுப்பாட்டு நிகழ்வு ஒன்றினைப் பற்றிய கூற்றுகளுள் **பொருத்தமற்ற** கூற்று
(1) வில்லுப்பாட்டு நிகழ்வு இடையிடையே நகைச்சுவையுடன் கூடியதாக அமைந்திருக்கும்.
(2) உரைகளுடன் இடையிடையே பாடல்கள் அமைந்திருக்கும்.
(3) விற்கடம், மிருதங்கம் என்பவை இதன் பிரதான தாளக் கருவிகளாகும்.
(4) பிரதான உரையினை ஒருவரே நடாத்திச் செல்வார்.

**34.** "இனி நமக்கொரு" எனும் பிலஹரி இராகக் கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகியவற்றின் எடுப்புக்கள் முறையே
(1) சமம், அநாகதம், அதீதம் (2) சமம், அநாகதம், அநாகதம்
(3) அநாகதம், சமம், அதீதம் (4) அநாகதம், சமம், அநாகதம்

**35.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - கச்சேரிகளின் ஆரம்ப உருப்படியாகப் பாட உகந்தது.
B - முத்தாயிஸ்வரங்களுக்கும் சாகித்தியம் அமைக்கப்பட்டிருக்கும்.
C - வார்த்தைகளைக் குறைவாகக் கொண்டது.
D - தான ஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படி.
E - முத்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள் என்பவற்றை உத்தராங்கப் பகுதியில் கொண்டது.
மேற்கூறப்பட்ட கூற்றுகளுள் தானவர்ணம் பற்றிய சரியான கூற்று
(1) A, B, E (2) A, C, D (3) B, C, D (4) C, D, E

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**36.** தியாகராஜர் பஞ்சரத்ன கிருதிகளை இயற்றிய காலம்
(1) 17 ஆம் நூற்றாண்டு
(2) 18 ஆம் நூற்றாண்டு
(3) 19 ஆம் நூற்றாண்டு
(4) 20 ஆம் நூற்றாண்டு


**37.** 'கெட்டி மேளம்' என அழைக்கப்படும் வாசிப்பு முறையில் இடம்பெறுபவை
(1) நாதஸ்வரம், தவில்
(2) மிருதங்கம், பறை
(3) நாதஸ்வரம், தாளம்
(4) பறை, மேளம்

**38.** பின்வருவனவற்றுள் சுத்தாங்கமாகப் பாடப்படுபவை
(1) தேவாரம், வெண்பா
(2) பெரியபுராணம், தேவாரம்
(3) திருவாசகம், திருப்புகழ்
(4) வெண்பா, பெரியபுராணம்

**39.** பின்வரும் மிஸ்ரஜாதி மட்டிய தாள அலங்கார ஆவர்த்தனத்திற்கு அடுத்து வரும் ஆவர்த்தனம்

| | $I_7$ | | O | | $I_7$ | |
|---|---|---|---|---|---|---|
| | காமபாதப | । | கம | । | கமாபதநித | ॥ |
| (1) | மாபதநிதப | । | மப | । | தநிபதநித | ॥ |
| (2) | மாபாதநித | । | மப | । | மபாதநிஸ்நி | ॥ |
| (3) | மபதாபதப | । | மப | । | மபதபதநித | ॥ |
| (4) | மாபதாநித | । | மப | । | மபாதநிஸ்நி | ॥ |

**40.**




மேலே உள்ள வீணை வாத்தியத்தில் 1, 2, 3 ஆகிய இலக்கங்களால் குறிப்பிடப்பட்ட பாகங்கள் முறையே
(1) சுரைக்காய், நாகபாசம், லங்கர்
(2) யாழிமுகம், லங்கர், கம்பிச்சுருள்
(3) யாழிமுகம், நாகபாசம், நாதரந்திரம்
(4) யாழிமுகம், நாபுக்கள், நாகபாசம்

※※

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

※ முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(i) சாமகானம் பாடப்பட்டதாகக் கருதப்படும் இராகத்தின் மேள எண் யாது?

(ii) இந்துஸ்தானி இசையை கோபாலகிருஷ்ண பாரதியாருக்குக் கற்பித்த குரு யார்?

(iii) பண்ணிசையில் பாஷாங்க இராகத்தினை எவ்வாறு அழைப்பர்?

(iv) தவில் கழி செய்யப்படும் மரத்தின் பெயர் யாது?

(v) 'பஜனைப் பத்ததியின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?

(vi) "பண்ணும் பதமேழும்..." என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம் எது?

(vii) ஆங்கில இசையில் 'ஒக்டேவ்' (octave) என அழைக்கப்படுவது யாது?

(viii) ராமாமாத்யரால் இயற்றப்பட்ட சமஸ்க்ருத கிரந்தம் யாது?

(ix) நாதஸ்வரத்தின் இரு வகைகளும் யாவை?

(x) புரந்தரதாஸரின் சிறப்புப் பெயர்கள் **இரண்டினைத்** தருக.

**2.** பின்வரும் இராகங்களுள் ஏதேனும் ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.)

(i) கல்யாணி

(ii) ஹரிகாம்போதி

(iii) மத்யமாவதி

**3.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.

(i) இராகமாலிகை

(ii) க்ரஹம்

(iii) தாளக் குறியீடுகள்

**4.** புல்லாங்குழல் வாத்தியம் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) புல்லாங்குழல் வாத்தியத்தின் வரலாற்றினைக் கூறி, அதன் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும், வாசிக்கும் முறையினையும் விளக்குக.

(iii) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைத்** தருக.

(iv) இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யமடைந்த தென்னிந்தியக் கலைஞர்கள் **நால்வரின்** பெயர்களைத் தருக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** முத்துஸ்வாமி தீக்ஷிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) பிறந்த இடம், வருடம்

(ii) இளமைக்காலம், கல்வி

(iii) இயற்றிய கிருதிகள்

(iv) உருப்படிகளின் நான்கு சிறப்பம்சங்கள்

**6.** 72 மேளகர்த்தா திட்டம் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) பன்னிரு மேளகர்த்தா சக்கரங்களின் பெயர்களைத் தருக.

(ii) முதல் இரண்டு சக்கரங்களில் வரும் இராகங்களின் பெயர்களைத் தருக.

(iii) பத்தாவது சக்கரத்தில் வரும் இராகங்களின் மேள எண்களையும் அவற்றின் ஸ்வரஸ்தானங்களையும் தருக.

(iv) இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்களின் எண்களைத் தருக.

**7.** சப்த தாளங்களும் 35 தாளங்களாகும் முறையினை விளக்கி அட்டவணைப்படுத்துக.

அல்லது

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

* * *